IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 107/2017

சாட்சி : PW1

பெயர் : தனம் தேதி: 15-09-2023

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

என்னுடைய பெற்றோர்கள் பெயர் ராமசாமி, பெருமாயி என்றால் ஆமாம். பெற்றோர்களுடைய சொந்த ஊர் கே.ஆர். தோப்பூர். என் உடன் பிறந்தவர்கள் 3 சகோதரர்கள் மற்றும் நான். புஷ்பா என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. மாரியம்மாள் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் என்னுடன் பிறந்த சகோதரிகள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிறக்காக அதை மறைத்து நான் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் பெற்றோர்களுக்கு 20 ஏக்கர் நிலம் இருந்தது. அதை வாரிசுகளுக்கு பாகம் பிரித்து கொடுத்தார்கள். பள்ளிக்கொண்டாம்பாறை, கே.ஆர். தோப்பிற்கு அருகில் உள்ளது. அது தாரமங்கலத்திற்கு அருகில் உள்ளது என்றால் ஆமாம். அந்த ஊரில் விவசாய நிலங்கள் இருந்தது என்றால் ஆமாம். 8 ஏக்கர் நிலம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அதை பாகப்பத்திரம் எழுதி பாகம் எழுதிக் கொண்டார்கள் என்றால் ஆமாம். 4 ஏக்கர் தோட்டமும், 4 ஏக்கர் மேட்டுக்காடும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அனைத்தும் தோட்டம். வழக்கிற்காக 20 ஏக்கர் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவைகள் இரண்டு இடங்களில் இருந்தது. அந்த இடங்களுக்கு நான் சென்றுள்ளேன். அந்த நிலங்களுக்கு அருகில் உள்ளவர்களின் பெயர் தெரியாது. என் கணவர் பெயர் வெங்கடேஷ். என் கணவரின் தாத்தா , பாட்டி பெயர்கள் எனக்கு தெரியாது. தற்போது சாட்சி தாத்தா பெயர் சித்தைய கவுண்டர் என்றும், பாட்டி பெயர் குழந்தையம்மாள் என்று கூறுகிறார். அவர்களுக்கு

இரண்டு மகன்கள். அவர்களின் பெயர்கள் அம்மாசி கவுண்டர், காளியப்பன் ஆகும். அவர்களுக்கு சொத்து இருந்தது. எவ்வளவு சொத்து இருந்தது என்று எனக்கு தெரியாது. என் மாமனாருக்கு சொத்து இல்லை. அவர் கூலி வேலை செய்து கொண்டிருந்தார். எங்கள் குடும்பம் எங்கள் ஊரில் பெரிய குடும்பம் என்றால் ஆமாம். என் திருமணம் முடிந்த சமயத்தில் மாமனார் இறந்துவிட்டார். என் கணவருக்கு அப்போது சொத்து இருக்கவில்லை. கே.ஆர். தோப்பூரில் சொத்து இருந்தது. தற்போது சாட்சி தன் கணவருக்கு பூர்வீக சொத்து கொஞ்சம் இருந்தது என்று கூறுகிறார். எனக்கு 3 மகன்கள் மற்றும் 1 மகள். அசல் வழக்கு எண். 36/2021 என்ற வழக்கு என்னுடைய மகன்கள் போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். என் பெயரிலும், என் கணவர் பெயரிலும் வழக்கு போட்டுள்ளார்கள். என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்துள்ளேன். அந்த வழக்கு பற்றிய விவரங்களை என் வழக்கறிஞர் கூறினார். அந்த வழக்கில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேன். ஒரு செல்லமுத்துவை தெரியும். அவர் கே.ஆர். தோப்பூரை சேர்ந்தவர். என்னுடைய சொத்தை ரூ.17,00,000/-க்கு விற்பனை செய்தோம். ரூ.11,00,000/- நெடுங்குளத்தில் காடு வாங்கினோம். சொத்தை விற்று காடு வாங்கினோம். அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். சொத்து வாங்கும் போது நானும், என் கணவரும் ஒன்றாக இருந்தோம். அவ்வாறு சொத்தை விற்று இடம் வாங்கியதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/- A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.